

# <u>ஸ்ரீரங்கநாத பாதுகாஸஹஸ்ரம்</u>

ஸ்ரீமதே லக்ஷ்மிந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

அஸ்மத் குருப்யோ நம:

அஸ்மத் பரம குருப்யோ நம:



**<u>ப்ரஸ்தாவ பத்ததி</u>**

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதாரக்கிக கேஸரீ

வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி

**<u>ச்லோகங்கள்:</u>**

**15**: **ஹிமவந் நலஸேது மத்யபாஜம்**

**பரத அப்யர்ச்சித பாதுகா அவதம்ஸ:**

**அதபோதநதர்மத: கவீநாம்**

**அகிலேஷு அஸமி மனோரதேஷு அபாஹ்ய**

**<u>பொருள்:</u>**

பரதனால் ஆராதிக்கப்பட்ட இராமனின் பாதுகையை எனது தலைக்கு அலங்காரமாகக் கொண்டேன். உடனே ஏற்பட்டது என்ன? இமயம் தொடங்கி, வானர வீரனான நளன் கட்டிய ஸேது வரை உள்ள அனைத்து கவிஞர்களையும் விட நான் உயர்ந்த மேன்மை பெற்றுவிடுவேன்.

**<u>விளக்கம்:</u>**

எனது விருப்பம் நிறைவேற நான் பாதுகையை எனது தலையில் ஏற்றேன். இதனால் உண்டாவது - மற்ற கவிஞர்கள் தங்கள் விருப்பம் நிறைவேற எனது கவிதைகளை பின்பற்றுவர் என்று கருத்து அனைவருக்கும் தேவையான விவரங்கள் இந்த ச்லோகங்களில் கிட்டும் என்றார்.

**16: அநிதம் ப்ரதமஸ்ய சப்தராசே:**

**அபதம் ரங்கதுரீண பாதுகே த்வாம்**

**கத பீதி: அபிஷ்டுவந் விமோஹாத்**

**பிஹாஸேந விநோதயாமி நாதம்**

**<u>பொருள்:</u>**

ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! எப்போது உண்டானவை என்று கூற இயலாதபடி எக்காலத்திலும் இருந்து வரும் வேதங்கள் கூட உன்னை முழுவதுமாகக் கூறி முடிக்க இயலாது. இப்படிப்பட்ட உன்னை, எனது அறியாமை காரணமாக, பயம் சிறிதும் இன்றி ஸ்தோத்ரம் செய்யத் தொடங்கி விட்டேன். இதன் மூலம் ஸ்ரீரங்கநாதன் மனம் மகிழ்ந்து புன்முறுவல் செய்கிறான். (நான் அவனை மகிழ்விக்கிறேன்).

**விளக்கம்:**

நம்பெருமாளின் வீரங்களைக் குறித்து புகழ்வது போன்று, அவனது ஹாஸ்யரஸம் வெளிப்படுத்த எண்ணுவதும் அவனுக்குச் செய்யும் கைங்கர்யமே ஆகும். இதனால் நிகழ்வது இந்த முழு ஸ்லோகத்தைக் கண்ட ஸ்ரீரங்கநாதன் மற்றவர்களைப் பார்த்து, *இது போல் உங்களால் இயற்ற இயலுமா*? என்று பரிகாசம் செய்து சிரிக்கப் போகிறான் என்பதாகும்.




**17: வ்ருத்திபி: பஹுவிதாபி: ஆச்ரிதா**

**வேங்கடேச்வரகவே: ஸரஸ்வதீ**

**அத்ய ரங்கபதி ரத்ந பாதுகே**

**நர்த்தகீவ பவதீம் நிஷேவதாம்**

**பொருள்:**

ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளை உயர்ந்த இரத்தினக் கற்கள் கொண்டு இழைக்கப்பட்டவளாக அலங்கரிக்கும் பாதுகையை!

நாட்டியம் ஆடுபவள் எவ்வாறு பலவித பாவங்களை வெளிப்படுத்துவாளோ, அது போன்று வேங்கடேசன் என்ற கவி மூலம் வெளிப்படும், உன்னைப் பற்றிய பலவிதமான புகழாரங்கள் அடங்கிய சொற்கள், உன்னை வணங்கிச் சேவிக்கவேண்டும்.



**<u>விளக்கம்:</u>**

பொதுவாக நாட்டியம் ஆடும்போது, மஹாராணியை அழைத்து அமர வைப்பார்கள். அந்த மஹாராணி முன்பாக நாட்டிய நிகழ்ச்சி நடைபெற, அதனைக் கண்டு மஹாராணி மனம் மகிழ்ந்து இரசிப்பாள். இங்கு பாதுகையை மஹாராணியாக அமர வைக்கிறார். அந்தப் பாதுகை முன்பாக நாட்டியம் ஆடுபவள் போன்று தன்னை எண்ணிக் கொள்கிறார். நடனம் ஆடுபவள் பல அபிநயங்களைப் பிடிப்பது போன்று, இவர் பாதுகையைப் பற்றிய பலவிவரங்களை வெளிப்படுத்துகிறார். அந்த சொற்கள் அனைத்தும் பாதுகை தன்னுடைய சொற்களைக் கேட்டு மகிழ்ந்து அமர்வதாகக் கூறுகிறார்.....

*பாதுகாதேவி வருவாள்*....

*தாஸன் விஜயலக்ஷ்மி ஸ்ரீனிவாஸன்*.....

